**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்ரமணியன்**

தேதி : 25.04.2026 – சனிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

குடியரசு துணைத் தலைவர் திரு. சி. பி. ராதாகிருஷ்ணன், மாணவர்களை அறநெறியுடன் செயல்படவும், வாழ்நாள் முழுவதும் கற்கும் ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, அகில இந்திய வானொலியின் 133ஆவது மன் கீ பாத் எனும் மனதின் குரல் நிகழ்ச்சியில், நாளை காலை 11 மணிக்கு உரையாற்றுகிறார்.

மேற்கு வங்க மாநிலத்தில், 142 தொகுதிகளுக்கு வரும் 29ஆம் தேதி நடைபெறும் 2ஆவது மற்றும் இறுதி கட்ட வாக்குப்பதிவிற்கான பிரச்சாரம் வரும் திங்கட்கிழமையுடன் முடிவடைகிறது.

புதுச்சேரி அரசு பள்ளிக் கல்வி இயக்ககம் கசார்பில் ஜவஹர் சிறுவர் இல்லத்தில், மாணவர்களுக்கு இலவச கோடைக்கால பயிற்சி முகாம் நடைபெற உள்ளது.

*பட்டமளிப்பு – V.P (21)*

குடியரசு துணைத் தலைவர் திரு. சி. பி. ராதாகிருஷ்ணன் இன்று மாணவர்களை அறநெறியுடன் செயல்படவும், வாழ்நாள் முழுவதும் கற்கும் ஆர்வத்தை வளர்க்கவும் அழைப்பு விடுத்தார். ஜெய்ப்பூரில் நடைபெற்ற ராஜஸ்தான் பல்கலைக்கழகத்தின் 35வது பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார். பட்டதாரிகள் சமூகத்திற்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்க வேண்டும் என்று வலியுறுத்திய அவர், கருணை, பன்முகத்தன்மைக்கான மரியாதை மற்றும் பொது நன்மைக்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். மேலும், மாணவர்கள் போதைப் பொருட்களிலிருந்து விலகி இருக்கவும், சமூக ஊடகங்களை பொறுப்புடனும் ஆக்கப்பூர்வமாகவும் பயன்படுத்தவும் அவர் அறிவுறுத்தினார்.

கல்வியின் உண்மையான நோக்கத்தை எடுத்துரைத்த திரு. சி.பி ராதாகிருஷ்ணன், அறிவை சமூக மேம்பாடு, புதுமை மற்றும் அறநெறி ஆகியவற்றிற்காக பயன்படுத்த வேண்டும் என்று கூறினார். ஆத்ம நிர்பர் பாரத் மற்றும் விக்ஸித் பாரத் ஆகிய தொலைநோக்குப் பார்வைகளைக் குறிப்பிட்ட அவர், மாணவர்கள் வேலைவாய்ப்பை உருவாக்குபவர்களாகவும், புதுமையாளர்களாகவும், தேசத்தைக் கட்டியெழுப்புபவர்களாகவும் திகழ ஊக்குவித்தார். பெண்களுக்கு அதிகாரமளித்தலை வலியுறுத்திய அவர், பெண் பட்டதாரிகளின் சாதனைகளில் பெருமிதம் தெரிவித்தார்.

*நிதி ஆயோக் (11)*

நிதி ஆயோக்-கின் துணைத் தலைவராக பொருளாதார நிபுணர் திரு. அஷோக் குமார் லஹிரி நியமிக்கப்பட்டுள்ளார். தற்போதைய துணைத் தலைவர் திரு. சுமன் கே பெரி-க்கு பதிலாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார். திரு. லஹிரி-யுடன் திரு. ராஜீவ் கௌபா, திரு. கே.வி. ராஜு, திரு. கோபர்தன் தாஸ், திரு. எம். ஸ்ரீனிவாஸ் மற்றும் திரு. அபய் கரண்டிகர் ஆகியோரை நிதி ஆயோக்கின் முழு நேர உறுப்பினர்களாக அரசு நியமித்துள்ளது. அனுபவம் வாய்ந்த கொள்கை வகுப்பாளரான திரு. லஹிரி, இதற்கு முன்பு இந்தியாவின் 12-ஆவது தலைமை பொருளாதார ஆலோசகராக பணியாற்றி உள்ளார். 15ஆவது நிதி ஆணையத்தின் உறுப்பினராகவும் இருந்த அவர், உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்ற நிறுவனங்களில் உயர் பதவிகளை வகித்துள்ளார்.

*ராதாகிருஷ்ணன் -1 (7)*

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூருக்கு வருகை தந்த, குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று ராஜஸ்தான் பல்கலைக்கழகத்தின் 35-வது பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டார். தொடர்ந்து. ஜெய்ப்பூரில் உள்ள பகவான் மகாவீர் புற்றுநோய் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 23-வது 'புற்றுநோயிலிருந்து மீண்டோர் தின' நிகழ்ச்சியிலும் அவர் பங்கேற்றார். குடியரசு துணைத் தலைவரின் இப்பயணம் குறித்த கூடுதல் தகவல் ….

(வாய்ஸ்)

(வாய்ஸ்)

நாட்டில் உள்ள இளையோர்கள் புகையிலை உள்ளிட்ட போதைப் பொருட்களில் இருந்து, விலகி இருப்பதன் முக்கியத்துவத்தை, குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார். ஜெய்ப்பூரில் உள்ள ராஜஸ்தான் பல்கலைக் கழகத்தின் 35ஆவது பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர், புற்றுநோய்க்கு எதிரான போராட்டத்தில், மன வலிமை மிகவும் முக்கியமானது என்று குறிப்பிட்டார். புற்றுநோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து, மக்களிடையே பிரச்சாரங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்ட அவர், தற்போது மாத்திரை வடிவிலான அதி நவீன சிகிச்சை முறைகள் ஊக்கமளிப்பதாக உள்ளது என்றார்.

தொடர்ந்து, ஜெய்ப்பூரில் நடைபெற்ற 'புற்றுநோயிலிருந்து மீண்டோர் தின' நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், புற்றுநோய் பாதிப்பு குறித்து, கூடுதல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை, வலியுறுத்தினார். புற்றுநோயில் இருந்து மீண்டவர்கள், இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கை அளிக்கும் தூதர்களாக உள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் மூலம் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் பெரிய அளவில் பயனடைந்து வருவதாகவும் அவர் கூறினார். சுகாதாரச் சேவைகளை மக்களுக்கு வழங்குவதில் இத்திட்டம் முக்கிய பங்கு வகிப்பதாகவும், திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கீமோதெரபி சிகிச்சை என்பது சவாலான ஒன்றாகத் தொடர்ந்தாலும், மாத்திரை வடிவிலான சிகிச்சைகளை அறிமுகப்படுத்தும் சமீபத்திய மருத்துவ முன்னேற்றங்கள் ஊக்கமளிக்கும் வகையிலான வளர்ச்சியாக அமைந்துள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார். ஒவ்வொரு ஆண்டும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகக் குறிப்பிட்டு, அவர் தனது கவலையைத் தெரிவித்தார். இந்நிகழ்வின் போது, காசநோய் ஒழிப்புப் பிரச்சாரம் வெற்றிகரமாக அமைந்தது போலவே, "புற்றுநோய் இல்லாத ராஜஸ்தான்" என்ற பிரத்யேகப் பிரச்சாரத்தை முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை ராஜஸ்தான் ஆளுநர் திரு. ஹரிபாவு பாக்லே வலியுறுத்தினார்.

***மன் கீ பாத் (7)***

பிரதமர் திரு. நரேந்திர மோடி, அகில இந்திய வானொலியின் 133ஆவது மன் கீ பாத் எனும் மனதின் குரல் நிகழ்ச்சியில், நாளை காலை 11 மணிக்கு உரையாற்றுகிறார். அனைத்து வானொலி நிலையங்கள், தூர்தர்ஷன், பிரதமர் அலுவலக யூ-டியூப் அலைவரிசை, மை கவ் இணையதளம், நியூஸ் ஆன் ஏர் செயலியில், இந்நிகழ்ச்சி நேரடியாக ஒலிபரப்பாகும். தொடர்ந்து, பிரதமர் உரையின் தமிழாக்கம் காலை 11.30 மணிக்கும், இரவு 8 மணிக்கும் இடம் பெறும்.

*நிர்மலா சீதாராமன் (12)*

மும்பையில் செபி அமைப்பின் 38ஆவது நிறுவன நாள் நிகழ்ச்சியில் இன்று கலந்து கொண்டு உரையாற்றிய மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், KYC நடைமுறைகளின்போது, வாடிக்கையாளர்களுக்கான சரிபார்ப்பு பணிகள் எளிதாக இருக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார். வாடிக்கையாளர்களுக்கான வங்கி நடைமுறைகள் இலகுவாக இருப்பதை அனைத்து நிதி ஒழுங்குமுறை நிறுவனங்களும் உறுதி செய்வதன் அவசியத்தை அவர் வலியுறுத்தி உள்ளார்.

சைபர் குற்றங்கள் மக்களிடையே நம்பிக்கையின்மையை தோற்றுவிக்கும் என்பதால், அனைத்து நிலைகளிலும், தீவிர கண்காணிப்பை செபி வலுப்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். முக்கிய தளங்களில் பொதுமக்களுக்கான உரிய விழிப்புணர்வை அனைத்து பிராந்திய மொழிகளிலும் செபி முன்னெடுக்க வேண்டும் என்றும் திருமதி. நிர்மலா சீதாராமன் கேட்டுக் கொண்டார்.

*மேற்கு வங்கம் (16)*

தமிழகம் உள்பட 5 மாநில சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை வரும் 4ஆம் தேதி நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையம் முழு வீச்சில் மேற்கொண்டுள்ளது. புதுச்சேரி யூனியன் பிரதேசம், அஸ்ஸாம், கேரளம், தமிழகம் ஆகிய மாநிலங்களுக்கு ஒரே கட்டமாகவும், மேற்கு வங்க மாநிலத்தில் 152 தொகுதிகளுக்கு முதற்கட்டமாகவும் வாக்குப் பதிவு முடிவடைந்துள்ள நிலையில் இப்பகுதிகளில் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் மூன்றடுக்கு பாதுகாப்பின் கீழ் முனைப்புடன் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

இதனிடையே மேற்கு வங்கத்தில் 142 தொகுதிகளுக்கு வரும் 29ஆம் தேதி நடைபெறும் 2ஆவது மற்றும் இறுதி கட்ட வாக்குப்பதிவிற்கான பிரச்சாரம் வரும் திங்கட்கிழமையுடன் முடிவடைவதால், அரசியல் தலைவர்கள் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவர் திரு. அமித் ஷா, காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி, திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் திரு. அபிஷேக் பானர்ஜி உள்ளிட்டோர் அம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

*ஜெ.பி. நட்டா (12)*

நாட்டின் உர பாதுகாப்பு கட்டமைப்பு வலுவாக உள்ளதாக, மத்திய ரசாயன உரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார். உரத் தட்டுப்பாடு நிலவுவதாக, காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்த குற்றச்சாட்டிற்கு, சமூக வலைதளங்களில் மறுப்பு தெரிவித்துள்ள திரு. நட்டா, கடந்த ஆண்டைக் காட்டிலும், தற்போது, அதிக அளவு உரம் கையிருப்பில் உள்ளதாகக் கூறினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையின் கீழ், சர்வதேச ஏற்றத் தாழ்வுகளின் மத்தியிலும், இந்திய விவசாயிகளின் நலன்கள் பாதுகாக்கப் படுவதாகக் கூறினார். இதனிடையே, நடப்பு பருவத்திற்கு 196 லட்சம் மெட்ரிக் டன் உரம் தேவைப்படும் நிலையில், 257.59 லட்சம் மெட்ரிக் டன் கையிருப்பில் உள்ளதாகவும், அனைத்து மாநிலங்களுக்கும் போதிய அளவு உரம் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும், அமைச்சகம் கூறியுள்ளது.

**புதுச்சேரி கோடைக்கால முகாம்** (5)

புதுச்சேரி அரசு பள்ளிக் கல்வி இயக்ககம் சார்பில் ஜவஹர் சிறுவர் இல்லத்தில், அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும், 6 முதல் 16 வயதுடைய மாணவர்களுக்கு இலவச கோடைக்கால பயிற்சி முகாம் நடைபெற உள்ளது. இது குறித்து ஜவஹர் சிறுவர் இல்லத்தின் தலைமை ஆசிரியர் திரு. மணிவேல் கூறும் கூடுதல் தகவல்கள்...

**(வாய்ஸ் - மணிவேல்)**

**Paytm Payment** வங்கிச்சேவைக்கான உரிமத்தை ரிசர்வ் வங்கி ரத்து செய்துள்ளது. இதற்கான செயல்பாடுகள் உடனடியாக அமலுக்கு வந்துள்ளன. இந்நிலையில், **Paytm Payment** வங்கி வாடிக்கையாளர்களின் வைப்புத் தொகையை முழுவதும் திருப்பி வழங்க போதிய ரொக்கக் கையிருப்பை அவ்வங்கி உறுதி செய்வதன் அவசியத்தையும், ரிசர்வ் வங்கி வலியுறுத்தி உள்ளது.

***கால்நடைகள் தினம் (8)***

உலக கால்நடைகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. விலங்குகள் மற்றும் பறவைகளை கூடுதல் அக்கறையுடன் கவனிப்பது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இத்தினத்தின் நோக்கமாகும். கால்நடை மருத்துவர்கள் – விலங்குகள் ஆரோக்கியம் மற்றும் உணவு பாதுகாப்பிற்கான வழிகாட்டிகள் என்ற கருப்பொருளின் அடிப்படையில் இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது. கால்நடை மருத்துவர் சங்கத்தின் சார்பாக பேரணிகள் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

***மலேரியா தினம் (12)***

இன்று உலக மலேரியா தினம் அனுசரிக்கப்படுகிறது. மலேரியா தடுப்பு, கட்டுப்பாடு மற்றும் சிகிச்சை குறித்த உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த நாள் ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது. 2007 ஆம் ஆண்டு நடைபெற்ற உலக சுகாதார மாநாட்டின் போது, உலக சுகாதார அமைப்பின் உறுப்பு நாடுகளால் இந்த தினம் நிறுவப்பட்டது. 2026 ஆம் ஆண்டு உலக மலேரியா தினம், 'மலேரியாவை ஒழிக்க உந்துதல்: இப்போது நம்மால் முடியும். இப்போது நாம் செய்தாக வேண்டும்' என்ற கருப்பொருளின் கீழ் அனுசரிக்கப்படும்.

இந்த நிகழ்வில், மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா, மலேரியா குறித்த விழிப்புணர்வைப் பரப்பவும், உயிருக்கு அச்சுறுத்தலான இந்த நோயை எதிர்த்துப் போராடுவதற்கான முயற்சிகளை வலுப்படுத்தவும் குடிமக்கள் ஒன்றிணைய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

***வானிலை (6)***

தெற்கு உள் கர்நாடகா மற்றும் தமிழகம் வழியாக ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுகிறது. இதனால், மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் தென் தமிழக கடலோர மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் ஏனைய தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலையே நிலவக்கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

குடியரசு துணைத் தலைவர் திரு. சி. பி. ராதாகிருஷ்ணன், மாணவர்கள் அறநெறியுடன் செயல்படவும், வாழ்நாள் முழுவதும் கற்கும் ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, அகில இந்திய வானொலியின் 133ஆவது மன் கீ பாத் எனும் மனதின் குரல் நிகழ்ச்சியில், நாளை காலை 11 மணிக்கு உரையாற்றுகிறார்.

மேற்கு வங்க மாநிலத்தில், 142 தொகுதிகளுக்கு வரும் 29ஆம் தேதி நடைபெறும் 2ஆவது மற்றும் இறுதி கட்ட வாக்குப்பதிவிற்கான பிரச்சாரம் வரும் திங்கட்கிழமையுடன் முடிவடைகிறது.

புதுச்சேரி அரசு பள்ளிக் கல்வி இயக்ககம் சார்பில் ஜவஹர் சிறுவர் இல்லத்தில், மாணவர்களுக்கு இலவச கோடைக்கால பயிற்சி முகாம் நடைபெற உள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. NV / KR / RK